# கோயில் கலையிலுள்ள வடிவப் பண்பியல்புகள்

(Attributes of form in temple art)

23

[1]கோ. வில்வநாதன் & [2]முனைவர் க. இராமன்,

[1]விரிவுரையாளர் ,வண்ணக்கலைத்துறை. அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம், தமிழ்நாடு–612002. kvilvam@gmail.com

[2]விரிவுரையாளர், சுதைசிற்பம் துறை, அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கல்லூரி, மாமல்லபுரம், தமிழ்நாடு

**ஆய்வுச் சுருக்கம்**

இந்தியாவின் அனைத்து கோயில்கள் மற்றும் மனிதர்கள் வாழும் இடங்கள் அனைத்திலும், வடிவவியல் வடிவங்களின் **(Geometric shapes)** அடிப்படையில் கட்டப்பட்ட அல்லது குடைந்து உருவாக்கப்பட்டவைகளாகத்தான் இருக்கின்றன. ஒவ்வொரு உயிரினங்களும் அதனது புலனறிவிற்கேற்ப பெற்ற, உடலமைப்பிற்குத் தகுந்தவாறு, அதனது வாழ்விடத்தை அமைத்து வாழ்ந்துகொண்டிருக்கின்றன. மனம் என்னும் ஆறாவது அறிவினைப் பெற்ற மனிதன் அவனது, வாழ்விடத்தினைத் தொடர்ந்து, இறை வழிபாட்டிற்கான இடங்களையும் உருவாக்கி, வாழ்வியலின் அடுத்தநிலைக்கு பரிணமித்துள்ளான். அப்பரிமாணத்தில் உருவாக்கிய இடங்கள் அனைத்தினையும், வடிவவியலின் வடிவங்களைப் பயன்படுத்தி, ஒழுங்குடனும் அழகியலுடனும் சேர்த்தே படைத்துள்ளான். அடிப்படையில் அவ்வடிவங்களின்வழி, அவன் கூறவந்த கருத்துக்களின் உள்ளீடாக உள்ள கூறுகள், நமக்கு என்ன உணர்த்துகின்றன என்பதனை கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**குறியீட்டுச் சொற்கள்**: வடிவ மூலம், வடிவ தன்மை, உயிர்மவியல் (Cymatics), பேரண்டத்தின் வடிவக்கொள்கை, கோயில்களில் உயிர்மவியல்.

**முன்னுரை**

நம் முன்னோர்கள், அவர்கள் பெற்ற ஞானம் மற்றும் அனுபவங்களின் வழி கிடைத்த கருத்துக்களை, வழிபாட்டுத் தலங்களில் பதிவு செய்துள்ளனர். வாழ்நிலை சார்ந்த அக் காட்சிப்பதிவுகள், பின்வரும் சந்ததியினரும் அதனை பின்பற்றி எளிதான முறையில் வாழ்க்கை நடத்தி, வாழ்வை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன. அப்பதிவுகள், நேரிடையாகவும், உள்ளீடாகவும் பல தகவல்களை நமக்கு தெரிவிக்கின்றன. அத்தகவல்களை பதிவு செய்வதற்கு பல, இலக்கண இலக்கியங்களை பயன்படுத்தியுள்ளனர். அவ்விலக்கணத்தின் ஒரு கூறான வடிவவியல் இயல்புகள் என்ன உணர்த்துகின்றன என்பதனை, சுருக்கமாக எடுத்துரைப்பதே இக்கட்டுரை.

**வடிவ மூலம்**

ஒரு வடிவம் எழும் நிலை என்பது, உறைநிலையில் உள்ள காலம் அசைவதாகும். காலத்தின் அசைவிலிருந்துதான் வடிவம் அமையத் தொடங்குகின்றது. ஒளி, ஓசை ஆகிய இரண்டும் வடிவத்தின் இரு நிலைகள் ஆகும். அணுவின் உள்ளிருக்கும் செறிவுதான் ஒளி ஆகின்றது. அச்செறிவின் அதிர்வே

ஓசை ஆகின்றது. எனவே ஒளியே வடிவம் ஆகின்றது. ஓசையே வடிவத்தை ஆக்குகின்றது. எல்லா வடிவங்களும் ஒளியே ஆகும். அவ்வடிவங்களை அமைப்பது அல்லது செதுக்குவது ஓசை ஆகும்.

ஆகாயம் முதல் நிலம் வரை யாவும் வடிவ நிலைகள். இவற்றின் மூலமாகவும் ஆதி நிலையாகவும் இருப்பது ஒளி. ஒளியே வடிவம் ஆகுகின்றது. ஆயினும் ஒளி தனித்த வடிவமாவதில்லை.

**வடிவ தன்மை**

ஒளி, வடிவம் ஆகும்போது அதன் ஆதிநிலையில் அமைவதே கோணம் ஆகும். கோணம் என்பது, நேரற்ற அல்லது சாய்வான என்னும் பொருள் கொண்டது. ஒளி, கோணம் ஆவதே வடிவத்தின் ஆதிநிலை. அதாவது ஒளி சாய்கையில்தான் வடிவம் அமையத் தொடங்குகின்றது.

ஒளியின் பண்பு துல்லியக் கோணம், ஒளியின் இயல்பு மடங்கல் ஆகும்.

அணுச்செறிவாகிய ஒளி, விரிவு என்னும் இருள் நிலையினை எட்டுகையில் அடர்த்தி எனும் உரு இயல்பு விளைகின்றது. உரு என்பது, நிலைத்தன்மை கொண்ட வடிவங்கள் ஆகும். எல்லா உருக்களும் அடர்த்தி எனும் இயல்பினவே. நிலம் எனும் பூதம் அடர்த்தி எனும் இயல்புடைய உரு. ஐம்பூதங்களின் பிறப்பு வரிசையில்,

ஆகாயம் : குறை அடர்வு

வளி : வளர் அடர்வு

வெப்பம் : திரள் அடர்வு

நீர் : நீள் அடர்வு

நிலம் : நிறை அடர்வு


இப்புரிதல்களின் வழியே, நாம் புலனறிவான கண்களாலும் மனதளவினாலும் உணர்வனவற்றை வெளிப்படுத்துவதற்கு, மேற்காண்பவை அடிப்படையானவை. எனவே இதனது 'ஓசை' என்னும் ஒரே ஒரு உணர்வினைக்கொண்டு, அவ்வோசை உணர்த்தும் வடிவங்களை இக்கட்டுரையில் சுருக்கமாக காண்போம்.

**பேரண்டத்தின் வடிவக்கொள்கை**

வடிவங்கள் யாவும் மாயையின் வெளிப்பாடுகள். மாயை என்பது பொய் அல்ல. மூலம் எதுவோ அது மறைந்திருக்க வெளிப்பாடாகத் தோன்றுவது மாயை ஆகும். மாயை என்றால் கற்பனை அல்ல. எதைக் காண்கிறீர்களோ அது கற்பனை அல்ல. ஆனால் காண்பது மூலத்தின் வெளிப்பாடே அன்றி மூலமல்ல. இந்த வெளிப்பாடு உங்களுக்கு ஒரு வகையிலும் பிற உயிரினங்களுக்கு வெவ்வேறு வகையிலும் உள்ளது. இதுதான் மாயையாகும்.

வடிவங்கள் எட்டு வகைப்படும்.

1. குத்து 2. கிடை 3. இடச்சாய்வு 4. வலச்சாய்வு




குத்து (Vertical) கிடை (Horizontal) இடச்சாய்வு (Left Slant) வலச்சாய்வு (RightSlant)

குத்து, கிடை - இரண்டும்தான் மூல வடிவங்கள்.


குத்து : சக்தி, எதிர் - கிடை : சிவம், நேர்

5. மேல்வளை 6. இடவளை 7. வலவளை 8. கீழ்வளை



மேல்வளை (Top Curve) இடவளை (Left Curve) வலவளை (Right Curve) கீழ்வளை (Bottom Curve)


கிடை உச்ச நிலை இயக்கம் கொண்டது நிலையானது. அசையாதது. இயக்கம் வேறு, அசைவு வேறு என்பதை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். அசையா பொருளும் அதன் அகத்தில் இயக்கத்தில் இருக்கிறது. சிவம் உச்ச நிலை இயக்கமாகும். அவ்வியக்கமே யாவற்றையும் தன்னை நோக்கி ஈர்க்கிறது. சக்தி தணிக்கும் இயக்க நிலை அல்லது எதிர் இயக்கம் கொண்டது. சிவத்தின் உச்ச நிலை இயக்கத்தை, சக்தியின் எதிரியக்கம் தணிக்கிறது. இவ்வாறு தணிக்கையில் தான் வடிவங்கள் உருப்பெறுகின்றன.



குத்து எனும் வடிவம், சிவம் ஆகிய கிடை வடிவத்தின் இயக்கத்தைத் தணிப்பதே வடிவங்களின் தொடக்கம். ஆகவே இவ்விரு வடிவங்களும் ஆதி வடிவங்கள்.

சாய்வு வடிவங்கள் இரண்டும் அடுத்த நிலை வடிவங்கள். இந்த நான்கும்தான் அடிப்படையான ஆதி வடிவங்கள். குத்து, கிடைமீது செயல்படும்போது உருவெடுப்பவை சாய்வுகள். அடிப்படையில் குத்து, கிடை ஆகிய இரு வடிவங்களே மூலமாக உள்ளன. இவ்விரு வடிவங்களின் இயக்கச் செயல்களால் விளையும் மாயைத்தான் மீதம் உள்ள ஆறு வடிவங்களும் ஆகும்.

இடச்சாய்வு, வளச்சாய்வு ஆகியன தொடர்ந்து செயல்படும் போது வளைகள் உருவாகின்றன. வளைகளின் தொடர்செயல்பாடு, வட்டத்தை உருவாக்குகிறது.



கோணம் எனும் வடிவ வெளிப்பாடு படைப்பில் இல்லை. ஏனெனில் கோணம் என்பது வடிவம் நிலைநிறுத்தப்படும்போது வெளிப்படும் அமைப்பு. எவ்வடிவமும் இயங்காமல் நிலைநிற்பதில்லை. ஆகவே, துள்ளிய கோணங்களை படைக்கப்பட்ட பொருட்களில் காண இயலாது.

இலைக்கும் காம்பிற்கும் இடையில் இருப்பது வளைகோணம். விரல்களுக்கு இடையில் இருப்பது வளைகோணம். இலைகள், காம்புகள், விரல்கள் ஆகிய பொருட்கள் இடையறாது இயக்கத்தில் இருப்பவை. ஆகவே இவற்றின் துல்லியக்கோணம் வெளிப்பட வாய்ப்பு இல்லை. இயக்கம் என்பது பொருட்களின் உள்ளிருக்கும் மறைவானது.

மனிதருக்கு வளைவடிவங்களே புலனாகின்றன. மனிதனால் வளை வடிவங்களை மட்டும்தான் காணவியலும்.

**உயிர்மவியல்** (Cymatics)

'ஓம்' என்ற ஒலி பல யுகங்களுக்கு முன்பே கண்டுபிடித்ததாக கூறப்படுகிறது. நாம் உட்பட நம்மைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் வடிவம் கொடுக்க ஒலிதான் ஆணிவேர். 'ஓம்' என்ற ஒலி 'சி' (C#, C sharp) என்னும் இசையில் உள்ள சுரத்தின் ஓசை (Musical Notes) என்று உணரப்படுகின்றது.

உயிர்மவியல் (Cymatics) என்பது டாக்டர் ஹான்ஸ் ஜென்னி என்ற சுவிஸ் விஞ்ஞானியால் உருவாக்கப்பட்ட ஒரு சொல். பொருட்கள் ஒலி அலைகளோடு வெளிப்படும் போது, அவை வெளிப்படும் ஒலி அலைகளின் அதிர்வெண்களுக்கேற்ப, வெவ்வேறு வடிவங்களை எடுக்கின்றன. டாக்டர் ஜென்னி குறிப்பிட்ட வார்த்தைகளின் சத்தமும் எல்லாவற்றுக்கும் மேலாக ஒலியும், பொருளின் வடிவங்களின் உருவாக்கத்தில். மாற்றத்தைக் கொண்டுவருகிறது என்பதை ஆய்வுகளின் வழியே நிரூபித்துள்ளார். ஓசையினை அதிக அல்லது குறைந்த அதிர்வெண்களுக்கு மாற்றப்படும் போது, வடிவங்களின் வடிவங்கள் (Patterns) மாறும். நாம் எதை தாக்கும் போதும், அதிர்வுகள் உருவாகின்றன, அது மேலும் ஒலியை உருவாக்குகிறது. வெவ்வேறு ஒலிகள் வெவ்வேறு வகையான அதிர்வுகளைக் கொண்டுள்ளன. இந்த அதிர்வுகள், வடிவியல் வடிவங்களை உருவாக்கலாம். இதனை உயிர்மவியல் (Cymatics) எனலாம்.


நம்மைச் சுற்றியுள்ள உலகமும், பிரபஞ்சமும் ஒரே சீரான அதிர்வெண் கொண்டவையாக இருப்பதனால்தான், இப்பிரபஞ்சம் சீராக இயங்குகின்றது. உயிர்மவியல் (Cymatics) என்பது ஒரு மென்படலத்தை ஒலி சந்திக்கும் போது ஏற்படும் இயற்பியல் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகும், ஒலி அறிவியல் ஆகும்,

நீர்ப்பரப்பு அல்லது நம் செல்களைச் சூழ்ந்திருக்கும் மெல்லிய இழை போன்ற ஆற்றலின் ஒரு வடிவம் தானாகவே சவ்வின் மீது பதியப்படுகிறது. உயர் அழுத்தத்தின் எதிர் முனைகள்-பகுதிகள் மற்றும் குறைந்த அழுத்தத்தின் கணுக்கள்-பகுதிகள் ஆகியவை, இந்த வடிவத்தில் உள்ளன. இந்த செயல்பாட்டில் ஒலியில் உள்ள காலமுறை அதிர்வுகள் மென்படலத்தின் மேற்பரப்பில் காலமுறை அதிர்வுகளாக மாற்றப்படுகின்றன, அவை ஒலியின் ஒப்புமைகள் அல்லது மாதிரிகளாக இருக்கும் அழகான (பெரும்பாலும் காணமுடியாத) வடிவியல் வடிவங்களை உருவாக்குகின்றன. எனவே உயிர்மவியல் என்பது நமது உடல்களுக்குள், அன்றாட பொருட்களின் மேற்பரப்பில் மற்றும் வானியல் அளவுகளில் கூட தொடர்ந்து நிகழும், ஒரு இயற்கை செயல்முறையாகும்.

ஒலிக்கு வடிவமுண்டு. ஒலி, உணர்வு அல்லது சிந்தனையின் மூலம் வெளிப்படும் ஒவ்வொரு வெளிப்பாடும், ஒரு குறிப்பிட்ட அதிர்வெண்ணை தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் தாக்குகிறது. நீர், காற்று அல்லது மணல் போன்ற ஒரு குறிப்பிட்ட ஊடகத்தின் வழியாக, ஒலி அதிர்வெண்கள் நகரும் போது, அது நேரடியாக பருப்பொருளின், இயற்பியல் அமைப்பை மாற்றுகிறது என்பதை நீரில் உள்ள உயிர்மவியல் அறிவியல் விளக்குகிறது.

**நீர் உயிர்மவியல்**

நீருக்கடியில் உருவாக்கப்படும் ஒலி நீருக்கடியில் தங்குகிறது. வழக்கமாக மனிதன் காற்றைக் கடத்துவதன் மூலம் கேட்கிறான். அதிர்வதன் மூலம் நாம் தண்ணீரின் மூலம் ஒலியைக் கேட்க முடியும். ஒலி அதிர்வெண் வடிவவியல் வடிவங்களை உருவாக்குகிறது. அவ்வடிவங்களின் சில வெளிப்பாடுகள் :





ஆறு வெப்ப நிலைகளில் உருவாகும் வடிவங்கள் (5oC, 10oC, 15oC, 20oC, 25oC மற்றும் 30oC) மூன்று மாதிரி அதிர்வெண்கள் ஒவ்வொன்றும் காட்டப்படுகின்றன.

ISSN:2582-9599

**மணல் உயிர்மவியல்**

ஒரு தட்டு போன்ற மேற்பரப்பில், நுண்ணிய மணல், மாவு அல்லது துகள்கள் போன்ற ஏதேனும் ஒன்றை தூவி, தட்டின் மீது ஒலி மூலம் அதிர்வு நிலையை செலுத்தி, ஒலியின் அதிர்வெண் மற்றும் அதன் அளவைப் பொறுத்து, துகள்களிலிருந்து ஒரு வடிவியல் அமைப்பு உருவாகத் தொடங்குகிறது. அதிர்வெண்ணின் அளவு அதிகமாகும்போது, இந்த வடிவம் மேலும் கூடுதல் வளைவுள்ள, வடிவங்களாக புலப்படுகின்றது. பல்வேறு வகையான ஒலிகள் பல்வேறு வகையான அதிர்வுகளை உருவாக்குகின்றன, இது பல்வேறு உயிர்மவியல் வடிவங்களை உருவாக்குகிறது. வெவ்வேறு ஒலிகளால் செய்யப்பட்ட இப்படம் வெவ்வேறு வடிவங்களைக் காட்டுகிறது.




மணல் நிரம்பிய தட்டின் விளிம்பின் குறுக்கே, ஒரு வயலின் இசைக்கருவியின் வில்லை வாசிப்பது மூலம், தட்டு அதிர்வுறும், அம்மணல் அதிர்வெண்களுக்கேற்ப மாறும் வடிவவியல் வடிவங்களை உருவாக்கும்.

**கோயில்களில் உயிர்மவியல்**

உயிர்மவியல் மூலம் காணப்படும் ஒலி அதிர்வெண்களுடன் தொடர்புடைய சித்தரிப்புகள் மற்றும் அலங்காரங்கள், கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் கட்டிடக்கலை வடிவங்களில் பெரிதும் காணப்படுகின்றன. பண்டைய மக்கள் ஒலி மற்றும் அதிர்வெண், மற்றும் அது நிகழ்த்தும் வியக்கத்தக்க வடிவியல் வடிவங்களின் வடிவங்களை கோயில்களில் பயன்படுத்தியுள்ளனர்.



இது போன்ற மனதை மயக்கும் படைப்புகள், நமது முன்னோர்கள், நாம் இன்னும் அணுகாத ஒலியின் உலகளாவிய வடிவங்களால், ஒலி குறித்த, ஆழமான விழிப்புணர்வு மற்றும் புரிதல்களை அறிந்திருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. பண்டைய சிற்பிகளுக்கு ஒலிகள் மற்றும் அதிர்வுகள் குறித்த அறிவு இருந்துள்ளது என்பதற்கான சான்று, எல்லாப் புராதனக் கோயில்களிலும் மேற்கூரைகளைக் கவனிக்கும்போது, பூக்களின் அமைப்பில் நுணுக்கமான நுணுக்கங்களுடன் கூடிய, கற்செதுக்கல்கள் உள்ளது. இம்மண்டபத்தின் மேற்கூரையில் உள்ள வடிவியல் வடிவங்களின் அமைப்பினை பார்த்தாலே விளங்கும்.

இந்த கோயில் மண்டபத்தின் மேற்கூரை மிகவும் அழகான, துல்லியங்கள் மிகவும் கூடுதலாக உள்ள, வடிவவியல் வடிவங்களைக் கொண்டுள்ளது. வரலாற்றாசிரியர்களும் தொல்லியல் ஆய்வாளர்களும், வெறும் அலங்கார நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவை என்று கூறலாம். மேலும் சில படங்களைப் பாருங்கள். மேலே உள்ள படங்களும் மிகவும் துல்லியங்கள் மிகவும் கூடுதலாக உள்ள, வடிவவியல் வடிவங்களைக் காட்டுகின்றன, மேலும் இவை அனைத்தும் சரியான சமச்சீராக உள்ள தளத்தில், இரு பரிமாணத்தில் (2D) இவ்வடிவங்களை சிற்பிகள் உருவாக்கவில்லை என்பதை நாம் உணரலாம்.

இவை அனைத்தும் அலங்கார நோக்கங்களுக்காக மட்டுமே செய்யப்பட்டவை என்றால், இவ்வளவு விரிவான, துல்லியங்கள் மிகவும் கூடுதலாக உள்ள, வடிவவியல் வடிவங்களை உருவாக்க,

சிற்பிகள் ஏன் இவ்வளவு வலியையும், நேரத்தையும், முயற்சியையும் எடுத்துக் கொண்டார்கள் என்பது, இதனுள் உயிர்மவியல் இருக்கின்றது என்பதனை நமக்குத் தெளிவாக்குகின்றது. கோயிலின் இருண்ட பகுதிகள் கூட, இது போன்ற உயிர்மவியல் வடிவங்களைக் கொண்டுள்ளன. வெளிச்சம் இல்லாத, எதுவும் தென்படாத, அத்தகைய இருட்டு அறையில் கூரையைப் பார்க்க முற்பட, உண்மையில் எவரும் முயற்சிப்பது குறைவு. இருப்பினும், இவை வெறும் அலங்காரத்திற்காக என்றால், யாரும் பார்க்கப் போவதில்லை என்று தோன்றும் இடத்தில், ஏன் சிற்பிகள் இத்தகைய வடிவங்களை உருவாக்கினார்கள் என்றால், இது ஒலியின்வழி விளையும் சப்தத்தை உணர்த்தும், அற்புதமான கட்டிடக் கலைக்கானது ஆகும்.

**முடிவுரை**

இயற்கையை வணங்கிய மக்கள். அவற்றிலிருந்து, அவர்கள் பின்னர் படைப்பின் உணர்வைப் பெற்றனர். மலைகளில், மரங்களில், தரைகளில், தண்ணீரில் அனைத்திலும் அப்படைப்பின் பிரதிபலிப்பு உணர்வுகள் பொதிந்துள்ளது என்பதை உணர்ந்தனர். படைப்பின் கொள்கையைப் பிரதிபலிப்பு செய்வதன் மூலமாக, கோயிலில் வடிவமாக அவர்கள் தங்கள் உணர்வுகளை வடித்தனர்.

கோயில்களும், வழிபாட்டுத் தலங்களும், மனித இனத்தால் வடிவமைக்கப்பட்ட மிக அழகான வடிவங்களாகும். இந்த அழகு, மனித குலத்தை சமச்சீர்மையையாக்குகின்றது. அரிசி மாவு போன்ற பொருட்களைப் பயன்படுத்தி வீடுகளில் அல்லது வெளியே தரையில் வடிவங்களாக உருவாக்கப்படும் கோலம் என்பதுகூட, காணக்கூடிய உயிர்மவியல்தான். இசை, கலை, வடிவவியல் ஆகியவை ஒன்றுடன் ஒன்று கலந்து, ஒலியின் வடிவங்களைப் உணர்ந்து கொள்ள மனித இனத்தை தூண்டும் உயிர்மவியல், பார்வைவழி கேட்கப்படும் இசையாகும்.

**துணை நூற்பட்டியல், இணைய முகவாரி, மேற்கோள்கள் :**

ஊழி நூல், வடிவு நூல், செந்நூல் - ம. செந்தமிழன்

https://cymascope.com/

https://secretsandmysteriesofindia.blogspot.com/2013/04/

https://cymascope.com/the-cymascope-instrument-is-featured-in-a-new-scientific-study-2/

https://s-v-m.tumblr.com/post/63367633552/sound-sculptures-ii

https://edinburghsoundmassage.com/blog/f/cymatics-the-visual-representation-of-sound-and-vibration

https://reverievibrationalrising.com/f/cymatics-frequency-and-the-sacred-geometry-of-sound

https://myvoice.opindia.com/2020/10/sanatan-advanced-technology-in-templespart-2/